சார்பு நீதிமன்றம், இலால்குடி

OS.No. 266/18

r/w 37/2020

2020-ம் ஆண்டு வியாழக் கிழமை மார்ச் 05-ம் நாள் PW1 சாட்சியான வாக்குமூலம். 54வது 54வது விதிகள் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி திரு.ஆர்.ராம்குமார் உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி தெரிவிக்கப்படுகிறது.

பெயர் = பாலசுப்பரமணியன்

த/பெ =

வயது =

ஊர் =

வட்டம் =

மாவட்டம் =

முதல் விசாரணை

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். என்னுடைய சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். 25.06.2012 தேதியில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட கிரய உடன்படிக்கை பத்திரம் அசல் வா.சா.ஆ.1. 03.02.2016 தேதியில் எனது வழக்கறிஞர் மூலம், பிரதிவாதிகளுக்கு நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ.2. மேற்படி அறிவிப்பை 1ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதை காட்டக்கூடிய அஞ்சலக ஒப்புகை அட்டை வா.சா.ஆ.3. பிரதிவாதிகளின் வழக்கறிஞர், என்னுடைய வழக்கறிஞருக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு வா.சா.ஆ.4. இ.ம.எண். 331/13 இன் அ.வ.எண். 381/13 மனுவில் பிறப்பிக்கப்பட்ட நிறைவேற்றாணை நீதிமன்ற சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5. சர்வேஎண். 100/3 எ 3 நிலமானது நாகமுத்து மகன் சங்கிலி பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளதை காட்டக்கூடிய கணிணி பட்டா வா.சா.ஆ.6.எனக்கும், சங்கிலிமுத்து என்பவருக்கும் இடையே ஏற்படுத்திக்கொண்ட ஒத்தி பத்திரம் வா.சா.ஆ.7. ( மேற்படி ஆவணம் சட்டமுறைப்படி பதிவு செய்யப்படவில்லை என்ற ஆட்சேபனையின் பேரில் குறியீடு செய்யப்பட்டது.)

தாவா சொத்திற்கு நான் செலுத்திய கிஸ்து ரசீது வா.சா.ஆ.8. தாவா சொத்திற்கு வழங்கப்பட்ட அடங்கல் கணக்கு விபரம் வா.சா.ஆ.9. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை ஏற்றுக்கொண்டு வழக்கில் தீர்வு காண வேண்டுகிறேன்.

( வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க முதல்விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது. )